Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.STC 325/2022 PW-1**

Name : திரு.பாலு
Father / Husband name : கோவிந்தசாமி
Village :
Age :
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 04.04.2024

**Accused Absent. Petition u/s. 317 CrPC filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் இதனுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக எடுத்துக்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்யவேண்டுகிறேன். 30.09.2018 தேதியிட்ட ஸ்டேட் பாங்க் இந்தியா, கள்ளக்குறிச்சி கிளையின் ரூ.1,50,000/- க்கான காசோலை எண் - 175590 **ம.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அக்காசோலையை 10.10.2018 அன்று நான் கணக்கு வைத்துள்ள தமிழ்நாடுமெர்க்கண்டைல் வங்கியில் பணமாக்க செலுத்தியத்திற்கான ரசீது **ம.த.சா.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அக்காசோலையானது எதிரியின் வங்கி போதிய பணமில்லை என்று 11.10.2018 அன்று திருப்பப்பட்டதற்கான வங்கியின் ரிட்டன் மெமோ **ம.த.சா.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அக்காசோலையை எதிரி கேட்டுக்கொண்டதற்கினங்க மீண்டும் 02.11.2018 அன்று நான் கணக்கு வைத்துள்ள தமிழ்நாடுமெர்க்கண்டைல் வங்கியில் பணமாக்க செலுத்தியத்திற்கான ரசீது **ம.த.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அக்காசோலையானது எதிரியின் வங்கி போதிய பணமில்லை என்று 03.11.2018 அன்று திருப்பப்பட்டதற்கான வங்கியின் ரிட்டன் மெமோ **ம.த.சா.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காசோலை திருப்பப்பட்டது குறித்து 19.11.2018 அன்று எதிரியின் விலாசம் மற்றும் அலுவலக முகவரிக்கு வழக்கறிஞர் மூலமாக அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **ம.த.சா.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியின் விலாசத்திற்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பானது முகவரி போதியதாக இல்லை என்று 26.11.2018

அன்று திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை **ம.த.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரியின் அலுவகத்திற்கு அனுப்பப்பட்ட அந்த வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி வாங்க மறுத்துவிட்டதாக 29.11.2018 அன்று திருப்பப்பட்ட அஞ்சலக உறை **ம.த.சா.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய போதிய கால அவகாசம் கேட்டதால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/- K.Kamala,
Judicial Magistrate No.I, Tindivanam